# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை
# கப்பலோட்டிய தமிழர்கள்

www.valvai.com

ராஜகோபால்

## கப்பலோட்டிய தமிழன்




**Captain C.மோகனதாஸ்**

மலர்வு: 14-09-1945 உதிர்வு: 01-09-1984

# கப்பலோட்டிய தமிழன்



www.valvai.com

Captain C.மோகனதாஸ்

மலர்வு: 14-09-1945 உதிர்வு: 01-09-1984

N. RAJKUMAR

www.valvai.com

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்

ராஜகோபால்

வெளியீடு:

கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்

233, ஸ்ரான்லி வீதி : யாழ்ப்பாணம்.

# Captain C. மோகனதாஸ்

அந்தத் தொலைபேசிச் செய்தியை என்னால் நம்ப முடியவில்லை!

காங்கேசன்துறையிலிருந்து என் இனியவர் 'ஷிப்பிங் கம்பனி' நணபர் கனக—ஜெயபாலசிங்கம் கரகரத்த குரலில் அந்தச் சோகச் செய்தியை என்னிடம் சொன்னார்.

ஆழிக்குமரன் பிரிவுத்துயர் மறக்கமுடியாத ஒரு நிலையில், வல்வெட்டித்துறை மண்ணுக்கு மற்றுமொரு பேரிடியா?

முப்பத்தொன்பது வயதில் வெளிநாட்டு ராட்சதக் கப்பல்களை ஓட்டுவதில் நிபுணத்துவம் பெற்று, தான் பிறந்த சொந்த மண்ணுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்ற லட்சிய வேட்கையோடு செயல்பட ஆரம்பித்த காப்டன் மோகனதாஸ் பிரிந்து விட்டார் என்ற செய்தியைத்தான் அவர் கூறக் கேட்டபோது சில விநாடிகள் என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை!

''ஹாபரிலிருந்து பகல் பதினொரு மணிக்குத்தான் புறப்பட்டார்! பருத்தித்துறை தபால் கந்தோரிலிருந்து காரை 'றிவேஸ்' எடுத்துச் சென்றபோது, அந்தக் கோரம் சுமார் இரண்டுமணி நேரத்துக்குள் நடந்துவிட்டது!''

—நண்பர் ஜெயபாலசிங்கம் விளக்கமாகச் சொன்னபோது என் கண்கள் கலங்கி நெஞ்சு சுமைதாங்க முடியாது கதறியது!



'காத்தமுத்துமாமா' என்று வல்வெட்டித்துறையில் எல்லாராலும் அன்போடு அழைக்கப்படும் கண்ணியமும், நேர்மையுமிக்க திரு. காத்தமுத்துவுக்கும், நாகரத்தினத்துக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தவர் மோகனதாஸ்.

வல்வை சிதம்பரக் கல்லூரி இவருக்குக் கல்வி அறிவை ஊட்டியது.

தன் பேரன் ஐயாத்துரை தண்டையலாக இருந்து கப்பலோட்டிப் புகழ் பெற்றவர் என்பதை மோகனதாஸால் மறக்கமுடியவில்லை!

அத்துறையில் சாதனை செய்ய வேண்டுமென்பதே அவர் லட்சியமானது.

நுகேகொடையில் புஹாரி நெவிக்கேஷன் நிறுவனத்தில் ஒன்பது மாதம் பயிற்சிபெற்று லண்டன் பிபிலேன் சிப்பிங் கம்பனியில் 'கடேட்'டாகச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது பதினேழு

வல்வெட்டித்துறையில் கப்பல் துறையின் புதிய தலைமகன் என்ற பெருமையையும் பெற்றார்.

நான்கு வருடப் பயிற்சி முடிந்தது.

இருபத்தொரு வயதில் குவைத் சிப்பிங் கம்பனியில் மூன்றாவது உத்தியோகத்தரானார்!

அந்தக் காலத்தில் திரைக்கடலோடித் திரவியம் தேடச்சென்ற வல்வெட்டித்துறைக் கப்பல்கள் எல்லாம், அம்மன் கோவில் தீர்த்தத் திருவிழாவன்று, அங்கு வந்து சேர்வது வழக்கம்

www.valvai.com

அந்தப் புண்ணிய தீர்த்தத் தினத்தில், **'வல்வைப் புரவி'** என்ற தனது லட்சியக் கப்பலை வல்வெட்டித்துறையில் நிறுத்த வேண்டுமென்று விரும்பினார்.

'மொடல்' கூடச் செய்து வைத்தார்!

இருபத்திரண்டாயிரம் தொன் எடையுள்ள குவைத் கப்பல் ஓடிக்கொண்டிருந்தபோது, காப்டன் மரணமாகி விட்டார்! அந்தப் பதவியைப் பொறுப்பேற்று, கப்பலை துறைமுகம் சேர்த்துக் கப்பல் கம்பனியின் பாராட்டைப் பெற்றார்!

குமுதினி லண்டனில் படித்துக் கொண்டிருந்தபோது, மோகனதாஸ் அங்கு காதலித்து அவரைக் கைப்பிடித்துக்கொண்டார்!

வல்வெட்டித்துறையில் பிரபல்யம் மிக்க குடும்பத்தைச் சேர்ந்த திரு. வேற்பிள்ளையின் புதல்வியே குமுதினி.

அன்புக் கலவையுடன் இன்பமாயமான நல்ல இல்லறம் நடத்தி வந்தார் 'காப்டன்'!

இவர்களின் ஏக புதல்வன் மகேந்திரா.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நமது நாட்டுக்குப் பெருமையும் நிதியும் தேடித்தர வேண்டுமென்பதும் இவரது பேரவா.

இந்த முயற்சியிலும் வெற்றி கண்டவர் இவர்.

கற்கோவளம் ஐஸ் பாக்டரியை ஆரம்பித்தார். தொண்டமானாற்றில் றால் வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.



வடக்கில் இன்று ஒரு துறைமுகம் நிமிர்ந்து நிற்பதற்கு காப்டன் மோகனதாஸும் ஒரு காரணம்

கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலுக்கு நேராக ஒரு பள்ளம் இருப்பதைக் கண்டு பிடித்து துறைமுகத்துக்கு ஏற்ற பகுதியை லங்கா சீமெந்து நிறுவனத்துக்கு எடுத்துக்காட்டினார்!

லங்கா சீமெந்து நிறுவனத்தின் துறைமுகக் காப்டனாகி வெளிநாட்டுக் கப்பல் எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட எல்லையிலிருந்து அக் கப்பலை இறங்கு துறைக்குச் சமீபமாகக் கொண்டுவந்து நிறுத்துவது இவரது பொறுப்பு.

வசதி குறைந்த அந்தத் துறைமுகத்தில் கப்பலைக் கொண்டு வந்து சேர்ப்பது முதல் நங்கூரமிடுவது வரை அவர் செய்யும் பணிகளை நேரில் கண்டு வியந்திருக்கிறேன்.

ஆடிக்கலவர அகதிகள் ஆயிரக்கணக்கில் கொழும்பிலிருந்து வந்தபோது துறைமுகத்தினுள் கப்பலைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்த பெருமையும் இவருக்குண்டு.

சிங்கப்பூர் Baltic Line கம்பனியுடன் பங்குதாரராக 'வெலா—6' என்ற கப்பலை வாங்கி ஓடவிட்டார்! அந்தக் கப்பல்தான் சமீபத்தில், பம்பாய் வெங்காயம் இலங்கைக்கு ஏற்றி வரும்போது கொழும்பிலிருந்து நான்கு மைல் தூரத்தில் மூழ்கியது. இதற்குப் பிறகு புதிய கப்பல் ஒன்றை சிங்கப்பூர் சென்று வாங்கினார். 'இஸ்ஸபெல்லா' என்ற இந்தக் கப்பல் சமீபத்தில் கொழும்பு, திருமலை வந்து சென்றது குறிப்பிடத்தக்கது.

வல்வை மண்ணில் கப்பலோட்டும் புதிய பரம்பரையை உருவாக்கும் பெருமைக்குரிய மணிவாசகர், பல விதங்களிலும் மோகனதாஸுக்கு உதவினார்.

www.valvai.com

பேருக்கும் புகழுக்கும் பெருமைக்கும் உரிய மோகனதாஸின் சகோதரர்கள் ஒன்பது.

லீலாவதி நாகேஸ்வரராஜா, பத்மாவதி துரைராஜா, மோகனதாஸ், கமலாவதி கந்தசாமி, ரஞ்சனதாஸ், பிரேமதாஸ், திலகவதி ஜெகன், ரவீந்திரதாஸ், ஜீவதாஸ், ஞானவதி.

ஏழுபேர் தங்கி, இருவாரங்கள் கடலில் பயணம் செய்யக்கூடிய 'ட்ரோலர்' ஒன்றைத் தானே வடிவமைத்து, ஊர்மேஸ்திரிகளைக் கொண்டு இருவருடமாக நிர்மாணித்தார். இருவருடங்களாக இந்தக் கப்பல் நிர்மாணிக்கப்பட்டு, முடியும் தறுவாயில் இருந்தது. இரண்டுலட்சத்தை விழுங்கிய இந்த லட்சியக் கப்பலை வல்வையில் வைக்கப்பட்ட தீ சாம்பராக்கிவிட்டது.

பல கனவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டே எதிர்பாராத விதத்தில் விதியின் கொடுமையான கைக்குள் சிக்குண்டு நம்மையெல்லாம் விட்டுத் திடீரெனப் பிரிந்துவிட்டார் இந்த வீரர்!

கப்பல் ஓட்டிய தமிழர்களின் வீரச் சரித்திரத்தில் மோகனதாஸின் பெயரும் நிச்சயம் இடம் பெறும்!



# குடும்பத்தாரின் புலம்பல்

'டார்லிங் டார்லிங்'

தன் கணவர் மீது உயிரான குமுதினி இப்படித்தான் மோகனதாஸை அன்போடு அழைப்பார். பிரிவுத்துயர் தாங்க முடியாமல் கதறி அழுகிறார்!

''டடா டடா'' என்று மகேந்திரா தன் அப்பாவை நினைத்துக் கதறுகிறார்.

''மகனே மகனே!'' என்று அழுது குளறுகிறார் அவர் அன்னை நாகரத்தினம்.

''அண்ணா அண்ணா'' என்று தினமும் உன் வீடு வரும் உன் தம்பி ரஞ்சனதாஸ் கதறுகிறார்.

மோகனதாஸின் மறைவு தாங்காமல் அவல ஒலி எழுப்பும் குடும்பத்தாரின் கதறல் இவை.

சகோதர, சகோதரிகள், மைத்துனர்
மைத்துனிமார், மருமக்கள்,

தம்பி ரஞ்சனதாஸின்

காணிக்கை

www.valvai.com

APPEARED ON PAGE 6
VEERAKESARI (TAMIL DAILY)
ON MONDAY 3RD SEPT 1984

3RD SEPT 1985

பரு. சம்பவத்தில் இறந்த

# கப்பல் காப்டனின் இறுதிக் கிரியைகள் நேற்று நடந்தன

(கனக. அரசரத்தினம்)

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது இறந்த கப்பல் காப்டன் மோகனதாஸின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை [illegible] இல் இடம்பெற்றன.

காங்கேசன்துறை துறைமுகத்துக்குவரும் பல கப்பல்களையும் கரைசுகுக் கொண்டு வந்து நங்கூரமிட வைக்கும் பணியை இவர் கவனித்துவந்தார் என தெரிவிக்கப்பட்டது.

38வயதான திரு. மோகனதாஸ் சம்பவதினம் பருத்தித்துறை தபாற்கந்தோருக்குள் சென்று வீட்டிற்கு காரில் திரும்பிக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் நடந்துள்ள அசம்பாவிதங்களின் போது மற்றும் கார்ச்சாரதியொருவரும் பழக்கடை உரிமையாளர் ஒருவரும் 12 வயது சிறுவனும், 62வயதான பெண் இருவரும் இறந்துள்ளதாக கிடைத்த தகவல்கள் மூலம் அறிய வருகிறது.

பருத்தித்துறையில் ஒரு பட்டமாளிகை உட்பட இரு அச்சகங்களும் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் நேற்று தொடர்பு கொண்டபோது சம்பவம் நடைபெற்ற இடத்தைநோக்கி தாம் மேலதிக அரசாங்க அதிபருடன் சென்றதாகவும் எனினும் பருத்தித்துறை நகருக்குள் இராணுவம் நிலை கொண்டிருந்ததால அங்குசெல்ல முடியாதிருந்ததாகவும் தெரிவித்தார்.

இறந்த திரு. மோகனதாஸின் இறுதிக்கிரியைகளில் தாம் கலந்து கொண்டதாகவும் குண்டு வெடிப்பு இடம்பெற்ற [illegible] பகுதியையும் பார்வையிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று காலை இது தொடர்பாக தாம் யாழ். இணைபதிகாரி பிரிகேடியர் நளின் சனவிரத்தினவுடன் தொடர்பு கொண்டு விபரங்களைக் கேட்டதாகவும் அதற்கு அவர் நேரில் சென்று பார்த்த பின்னர் தெரிவிப்பதாகக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக தாம் இப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிக்கைகளை சேகரிக்கும்படி பணித்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக நேற்று மாலை யாழ். இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனவிரத்னவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தற்போது பருத்தித்துறையில் அமைதி நிலவுவதாகவும் இராணுவத்தினர் தொடர்ந்து அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடைகளுக்கும், உடைமைகளுக்கும் தீ வைக்கப்பட்டதாக கூறப்படுவது பற்றி அவரிடம் வினவியபோது பொலிஸ் தாக்குதலைத்தொடர்ந்து இந்த அசம்பாவிதம் நிகழ்ந்ததாகவும் தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

P.T.O

www.valvai.com

The Eelanadu (Tamil daily) 04-9-84

EELANADU 4/9/84

4/9/84

அகால மரண

## அனுதாபச் செய்தி

### கப்டன் C. மோகனதாஸ்

www.valvai.com

எமது பணியகத்தின் நெடுநாளைய அங்கத்தவரும், எமதுஸ்தாபனத்தின் அபிமானியும், எமது ஸ்தாபனத்தினர் அனைவரையும் தம் அளவு கடந்த அன்பால் ஈர்த்தவருமாகிய பெருமகன் யாழ். ஷெல்கோ மரைன் கம்பனி நிர்வாக இயக்குநர் கப்டன் C. மோகனதாஸ் அவர்கள் 1984 செப்ரெம்பர் முதலாம் திகதி அகாலமரணமெய்தியது குறித்து எமது ஆற்றொணாத்துயரத்தையும் அன்னார் குடும்பத்தினர் உற்றார், உறவினர்க்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அன்னார் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**யாழ். குளோபல்**

www.valvai.com

(1597)

www.valvai.com



வேட்டி கட்டிய இலங்கைத் தமிழர்களைப் பார்க்க அமெரிக்கர்கள் அன்று திரண்டிருந்தார்கள்!

அமெரிக்காவின் பிரசித்திவாய்ந்த 'குளோசெஸ்ரர்' துறைமுகத்தில் திரண்டிருந்த அமெரிக்க மக்கள்,

அவர்களை விசித்திரமாகப்பார்த்தார்கள்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களுக்குச் 'சுடச்சுட' நல்ல செய்தி!

"அமெரிக்கா வந்துள்ள இலங்கையின் முதல் உத்தியோகப் பற்றற்ற தூதுவர்கள்"

— இவ்வாறு நியூயார்க்கிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த 'போஸ்ரன் குளோப்' என்ற தினசரி எழுதியது.

இத்தனைக்கும்—

அவர்கள் என்ன செய்தார்கள்?

நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை—



ஆழ்கடலில் சாகசப் பயணம் நிகழ்த்திய அந்த வரலாற்று நாயகர்களுடைய தீரக்கதையை, சரித்திரம்தான் சில சமயம் மறந்தாலும், ஆண்டாண்டு காலம் சென்றாலும், ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருக்கும் கடல் அன்னை மறக்க மாட்டாள்!

நெஞ்சு சிலிர்க்கிறது!

அமெரிக்காவில் அன்று ராஜாங்க மரியாதையுடன் வரவேற்கப்பட்டவர்கள்.

இலங்கையின் வடக்குக் கரையோரப் பகுதியான வல்வெட்டித்துறை என்ற சிற்றூரில் பிறந்தவர்களே!

சிற்றூரில் பிறந்தவர்களாயினும்—

பிறந்த ஊரின் பெருமையையும், பெற்ற நாட்டின் மதிப்பையும் உலகறியச் செய்து விட்டார்கள்!

இன்று கூட,

வளர்ந்துவிட்ட விஞ்ஞானயுகத்திலும், வங்காள விரிகுடாவில்—

மிகச் சக்தி வாய்ந்த நவீன ராட்சதக் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் பெரும் பெரும் அபாயங்களுக்குள்ளாகிக் கடலோடு சங்கமித்து விடுகின்றன.

கோடிக்கணக்கான ரூபா செலவில், நவீன யந்திரங்களைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன இப்போதைய கப்பல்கள்!

ஆனால்—

1930-ஆம் ஆண்டில், உள்ளூர் வேப்பமரத்தில், வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரினால் அழகுற அமைக்கப்பட்ட இரட்டைப் பாய்மரக்கப்பலில்,

அந்தப் பெருங்கடலினுள் கப்பல் விட்டு வெற்றிப் பயணம் நடாத்தியிருக்கிறார்கள்—

வல்வெட்டித்துறைச் சிங்கங்கள்!

அத்திலாந்திச் சமுத்திரத்தில் அடலேறுகளாகப் பவனி வந்த 'கதை' ஒருவரலாறு!

ஆம்,

ஒரு சரித்திரம் என்று கூடச்சொல்லலாம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தது ஒரு சரித்திரமென்றால்,

மனிதன் அம்புலித்தரையில் காலடி வைத்தது ஒரு சாதனையென்றால்,

இதுவும் ஒரு சரித்திரம்தான்!

இன்று புதுப் புதுச் சாதனைகள்.

பத்திரிகைகளைத் திறந்ததும், 'சாதனை, சாதனை' என்ற செய்திகள், பாராட்டுகள்!

ஆனால்—

இவற்றையெல்லாம் தூக்கியடித்து விடுவது போல, 'சாதனைகளுக்கே சவால்விடும் சாதனைகளைச் செய்வோம்' என்று வல்வெட்டித்துறையின் கடந்த காலம் சொல்லாமல் சொல்லுகிறது!

—மாலுமி சாஸ்திரத்தை முற்றுமுழுதாகக் கரைத்துக் குடித்தவர்கள்!

—வான சாஸ்திரத்தைக் கற்றுத்தெளிந்தவர்கள்!

ஆழ்கடலை வெற்றி கொண்டு கடலோடுவதில் 'தனிக் காட்டுராஜா'க்களாக வல்வெட்டிதுறைக் கடலோடிகள் திகழ்ந்தனர்!

இந்திய மன்னர்கள் வல்வைக் கப்பலோட்டிகளைக் கௌரவித்தனர்!



இன்று நேற்றல்ல—

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

அப்பொழுதே ஆழ்கடலில் தாம் கட்டிய கனமிகு கப்பல்களைக் கடலோடவிட்டார்கள்!

இந்திய மன்னர்கள் மட்டுமல்ல,

ஒல்லாந்தரும்,

போர்த்துக்கியரும்,

பிரித்தானியரும்,

வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்குத் தனிமதிப் பளித்தார்கள்!

முதலாம் மகாயுத்தத்துக்கு முன்னர் —

இந்தியாவுக்கும்,

மலாயாவுக்கும்,

பர்மாவுக்கும்,

பாய்மரக்கப்பல்கள் வல்வெட்டித்துறை துறைமுகத்திலிருந்து படைபடையாகச் சென்று வந்தன!

இரண்டாம் மகாயுத்தம் வரை இது தொடர்ந்தது.

அரிசியும், நெல்லும், மூத்துச்சம்பாவும், கறிச்சரக்கும் அங்கெல்லாம் சென்று ஏற்றிக்கொண்டு வந்து நமது கஷ்டத்தைத் தீர்த்த பெருமை வல்வெட்டித்துறைக் கடலோடிகளைச்சாரும்.

அதிராம் பட்டினம்,

நாகபட்டினம்,

காக்கிநாடா,

கல்கத்தா,

சிட்டகொங்,

www.valvai.com

www.valvai.com



ரங்கூன்,

பினாங்கு,

போன்ற இடங்களிலெல்லாம் வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் கப்பல் செலுத்திய 'கதைகள்,'

ஏராளம்! ஏராளம்!!




www.valvai.com

வல்வெட்டித்துறை துறைமுகத்தில் இரண்டாம் மகா யுத்தத்துக்கு முன்பாக சுமார் அறுபது பெரிய பாய்மரக் கப்பல்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மூவாயிரத்திலிருந்து பதினாயிரம் வரையான மூடைகள் ஏற்றக்கூடிய பெரும், பெரும் பாய்மரக் கப்பல்கள் திரைகடலோடி வாணிபம் செய்து கொண்டிருந்தன.

www.valvai.com

# முன்னுரை

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்துமூன்று என எண்ணுகின்றேன்.

பள்ளிப் பையனொருவன் அரைக் காற்சட்டையுடன் 'ஈழநாடு' அலுவலகத்திற்கு வந்து ஒரு கடிதத்தை நீட்டுகின்றான். எனது முக்கிய நண்பர்களிலொருவரான தாழையடி சபாரத்தினம் கொடுத்த கடிதம் அது.

பிரித்துப் படிக்கின்றேன்.

'இக்கடிதம் தரும் தம்பி' எழுத்துத்துறையில் பிரகாசிக்க விரும்புகிறார். அவருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று கடிதத்தில் 'தாழையடி' எழுதியிருந்தார்.

www.valvai.com

கடிதத்தைப் படித்து முடிக்கவும், இன்னொரு, என் வலப்பை நீட்டுகின்றான் பொடியன்.

அது ஒரு சிறுகதை.

பெயர் 'மொட்டை மரம்'.

அடுத்த வாரமே அந்தச் சிறுகதை ஈழநாடு வாரமலரில் வெளியானது.

விட்டானா பின்னே ?

நண்பர் தாழையடியின் சிபார்சைச் சரியானபடி பயன்படுத்திய திறமையை என்னவென்று சொல்வேன்.

சிறுகதை, கட்டுரை, கவிதை—

சிறுகதை, கட்டுரை, கவிதை—

இப்படியே மாறி மாறி அவன் ஆக்கங்கள் ஈழநாடு வாரமலரில் இடம்பெறலாயின.

www.valvai.com

என் நெஞ்சிலும் மெதுவாக இடம்பிடித்துக் கொண்ட அவன், வீட்டிலும் இடம் பிடித்துக் கொண்டான்.

'சபா அண்ணை, சபா அண்ணை' என்று தனது பதினைந்தாவது வயதில் என்னைச் சுற்றிக் கொண்டிருந்த அந்த குமாரசாமி ராஜகோபால் இன்று எனது நண்பர்.

நண்பர் மாத்திரமல்ல; பக்கத்தேயிருந்து பணியாற்றும் பத்திரிகையாளன்.

ராஜகோபாலனைப் பத்திரிகையாளனாக்கிய பெருமை ஆசிர்வாதம் மாஸ்டரையே சாரும். ராஜகோபால் 'விவேகி' சஞ்சிகையின் ஆசிரியரானார்!

ராஜகோபாலின் வேகத்திற்கு விவேகி ஈடுகொடுக்காது போகவே (விவேகி, திங்கள் ஏடு) சுறுசுறுப்பான 'ஈழநாடு' நாளேட்டில் அவர் நுழையலானார். சிலகாலம் ஈழநாடு வார மலருக்கு எனக்கு உதவியாயிருந்தபோது அவர் ஆற்றிய பணி அளப்பரியது. இயல்பாகவே சுறுசுறுப்புமிக்க இளைஞனை ராஜகோபால், வாரமலர் கலையரங்கம் பகுதியை மிக்க சுவை படச் செய்தார். கலைப்பகுதியுடன் மட்டும் நின்றாரில்லை. அவர் கைபடாத அம்சமே இல்லை எனலாம். பேட்டிக் கட்டுரை எழுதுவதற்கு 'நம்பர் வன்.'

செய்தி எடுப்பதிலும் செய்திகளைத் தயாரிப்பதிலும் அவர் தனித்துவம் பெற்றவர்.

எந்த எந்தச் செய்தியை எப்படி எப்படி வாசகர்களுக்கு வழங்கவேண்டுமென்ற வித்தை கைவரப் பெற்ற பத்திரிகையாளன் அவர்.

சில ஆண்டுகளின் முன் ஒரு நாள் அவர் எழுதிய ஒரு செய்தி, என்னை ஒரு பெண்ணைபோல கேவிக்கேவி அழ வைத்து விட்டது. அந்தச் செய்தி, குறிப்பிட்ட சம்பவத்தை என் நெஞ்சில் மிக இறுக்கமாகப் படம்பிடித்துவிட்டதால் இன்றும் கூட அதனை நினைக்கும்போது என் கண்கலங்கும். இரணைமடுக் குளத்தில் யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த அந்தப் பிஞ்சுப் பெண் பலியாகிவிட்டாள். கடைசியாக நீரின்மேலே அவளது ஒரு கையின் விரல்கள் மட்டும் தெரிகின்றன. இது அழியாத ஒரு காட்சியாக என் மனத்தில் பதிந்துவிட்டது அந்தச் செய்தியைப் படித்த அத்தனை பேரும் அந்தச் சின்னஞ்சிறிய பெண்ணின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நிச்சயம் வேண்டுதல் செய்திருப்பர்.



'கப்பல் ஓட்டிய தமிழன்' விஷயத்திலும் தம்பிப்பிள்ளைத் தண்டையல் நம்முன்னால் நின்று நம்முடன் பேசுவது போல இருக்கவில்லையா? வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை நீண்டு விரிந்து கிடக்கும் சமுத்திரத்தின்மீது 'அன்னபூரணி அம்மா'வில் நாம் பயணம் செய்வது போன்ற உணர்வு ஏற்படவில்லையா? இதெல்லாம் எதைக் காட்டுகின்றன? தனது கிராமமான வல்லுவெட்டியை அடுத்த வல்வெட்டித்துறையின் தமிழ் மகன் ஒருவன் இங்கிருந்து அமெரிக்காவுக்குக் கப்பல் வணிகம் செய்தான் என்ற பெருமைப் புளகாங்கிதத்தின் பிரதிபலிப்பை மட்டுமின்றி, எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவர்ச்சிகரமாகக் கையாளும் திறமையையுமே காட்டுகின்றன.

ராஜகோபாலனின் எழுத்துத்திறமை தனித்துவமானது.

'அன்னபூரணி அம்மாள்' ஈழநாடு வாரமலரில் தொடர்ந்து வெளிவந்தபோது, அதனை எல்லாரும் ஆவலுடன் காத்திருந்து படித்தனர்.

நூலுருப் பெற்றதன் மூலம் 'அன்னபூரணி அம்மாள்' இன்று அழியாத சரித்திரமாகி விட்டாள்.

மேலும் பல சரித்திரங்களை ராஜகோபால் படைப்பாராக!

சு. சபாரத்தினம்
(சசிபாரதி)
ஆசிரியர்: ஈழநாடு-வாரமலர்

www.valvai.com

# என் பார்வையில் நூலாசிரியர்

எழுத்துலகில் ஏதாவது சாதித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் முனைந்து செயல்படுகிறவர்களில் ராஜகோபாலையும் ஒருவராகக் காண்கிறேன் நான்.

நாடு, நகர், கிராமம் பட்டி தொட்டி என்று மனிதன் எங்கெங்கு வாழ்கின்றானோ அங்கெல்லாம் மனிதத்துவம் பரிணமிக்க வேண்டும் - அதற்காக பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களை அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் இனங்கண்டு வெளிப்படுத்திட வேண்டும் என்பதில் இவருக்கு ஆர்வம் மிகுதி. அந்த வகையிலேயே இவரது கட்டுரைகள் பேட்டிகள் போன்ற எழுத்துவடிவங்கள் அமைகின்றன.

முரண்பாடுகளுக்கிடையில் முற்போக்குச் சிந்தனையுடன் எழுதும் ராஜகோபால் ஒருவர்; இப்படியும் எழுதுவேன் எனக் கூறுவதுபோல் விரசபாணியில் வெளுத்துவாங்கும் ராஜகோபால் இன்னொருவர்.

இந்த முரண்பட்ட இரண்டு ராஜகோபால்களையும் எடை போட்டுப் பார்த்தால் முதலாமவர் மதிப்புக்கும் மரியாதைக்கும் அன்புக்கும் அரவணைப்புக்கும் உரியவராகிறார்.

அந்த ராஜகோபாலைத்தான் இந்தக் கட்டுரை நூலிலும் தரிசிக்கின்றோம்.

— பி. எஸ். பெருமாள்
(பதில் ஆசிரியர், ஈழநாடு)



# கலங்கரை வெளிச்சம்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது தமிழர்க ளுக்கான ஒரு தனிப்பழமொழி. "கப்பலோட்டிய தமிழன்" பரம்பரை இன்றைய தமிழர் பரம்பரை.

இந்தப் பரம்பரையின் வீரதீரச் செயல்களுக்குப் பல கதைகள் வாய்வழியாக வாழ்ந்து வருகின்றன. கொட்டும் மழையிலும், கொதிக்கும் வெயிலிலும், சுழற்றும் சூறாவளி யிலும், கொந்தளிக்கும் கடலலைகளுடன் வீரவாழ்க்கை வாழும் தமிழரின் கதை தனித்துவமானது.

வாய்வழியாக வாழும் இந்தக் கதைகளை நம்மில் பலர் மற் றவர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் புத்தகமாகப் படித்தது குறைவு; வெகு குறைவு.

அந்தக்குறையைப் போக்கியிருக்கிறார் என் இனிய நண்பர் ராஜகோபால்.

பத்திரிகையில் இக்கதை தொடர்கட்டுரையாக வெளிவந்த போது, வாராவாரம் விழுந்து விழுந்து படித்தவர்களில் நானும் ஒருவன். ராஜகோபால் இலக்கியகாரனாகவும், சிறந்ததொரு பத்திரிகைக்காரனாகவும் விளங்குவதால் விறு விறுப்பான நாவல்போலக் கட்டுரை அமைந்திருப்பதைப் படிப் பவர்கள் உணர்வார்கள்.

தினகரன், ஈழநாடு பத்திரிகைகளின் உதவி ஆசிரியராக பணியாற்றிய அவர் பெற்ற அனுபவம், மக்களின் உணர்வு களை அவர் அறியக் காரணமாக அமைந்தது. அந்த உந்த லால் எழுந்ததுவே இந்த நூலாகும்.

நீண்டகாலம் நிலைபெற்று வாழ்ந்து, நம்மவர்களின் வீர வாழ்க்கையைக் கலங்கரை வெளிச்சம் போல் பளிச்சிட்டுக் காட்டும் 'வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' நூல் விளங்கும் என்பது திண்ணம். நண்பர் ராஜகோபாலின் நுண்ணிய பேனாவின் வலிமையே இதற்குச் சான்று.

இந்நூலை 'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்' வெளியீடாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். ராஜகோபாலனின் வேறுபல ஆக்கங்களும் நூலுருப் பெற இந்நூல்வழி அமைத்துக் கொடுக்கும்.

www.valvai.com

எஸ். திருச்செல்வம்
செயலாளர்
'கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள்'

215, R/3/9 - பார்க் வீதி,
கொழும்பு - 5
27-09-1984




தொடரும்